முக்கிய வார்த்தைகள்:
*மூடுபனி / புகை மூட்டம்*
*வானிலை*
*சுற்றுப் புறச்சூழல்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**23 அக்டோபர் 2026 / 12 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1448**

# சுற்றுப் புறச்சூழல்களின் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்வது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! வாழ்க்கைச் சவால்கள் எவையாக இருந்தாலும் அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலையும் மன உறுதியையும் அல்லாஹ் நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நமது வானம் அடர்த்தியான, நீடித்த **மூடுபனியால்** மூடப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் தெளிவாகவும் பிரகாசமாகவும் இருந்த வானம், இருண்டு கலங்கலாக மாறியுள்ளது. ஆயினும், வாழ்வில் தொடர்ந்து அறிவு ஞானத்தைத் தேடும் ஓரிறை நம்பிக்கையாளர்களாகிய நாம், இந்த இருண்ட சூழ்நிலைகள் நமது உள்ளங்களையும் மனங்களையும் கலங்கச் செய்ய அனுமதிக்கக் கூடாது. மாறாக, இந்தச் சூழ்நிலையிலிருந்து நாம் என்ன நினைவூட்டல்களையும் பாடங்களையும் கற்றுக்கொள்ளலாம்? என நாம் சிந்திக்க வேண்டும். திருகுர்ஆனின் "அர்-ரஹ்மான்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 7-8 வரையிலான வசனங்களில் காணப்படும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் வார்த்தைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

وَٱلسَّمَآءَ رَفَعَهَا وَوَضَعَ ٱلْمِيزَانَ ٧ أَلَّا تَطْغَوْا۟ فِى ٱلْمِيزَانِ ٨

பொருள்: மேலும் வானத்தை - அவனே அதை உயர்த்தித் தராசையும் ஏற்படுத்தியுள்ளான்; நீங்கள் நிறுப்பதில் வரம்பு மீறாது இருப்பதற்காக [அவ்வாறு செய்துள்ளான்].

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

இந்நவீன உலகம், **சுற்றுப் புறச்சூழலின்** நிலைத்தன்மை மற்றும் பருவநிலை மாற்றம் குறித்து விவாதிக்கத் தொடங்குவதற்கு, வெகு காலத்திற்கு முன்பிருந்தே, **சுற்றுப் புறச்சூழலைப்** பாதுகாப்பதன் அவசியத்தை இஸ்லாம் நெடுங்காலமாக வலியுறுத்தி வருகிறது. நம்மைச் சுற்றியுள்ள பூமியும் காற்றும் அல்லாஹ்விடமிருந்து நாம் பெற்றுள்ள அமானிதங்கள் என்றும், அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் என்றும் திருக்குர்ஆனும் "சுன்னாஹ்" எனப்படும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வழிமுறையும் நமக்குக் கற்பிக்கின்றன. ஓரிறை நம்பிக்கை யாளர்களாகிய நாம், **சுற்றுப் புறச்சூழலைப்** பாதுகாக்கும் முயற்சிகளில் முன்னணியில் இருக்க வேண்டும். இந்தப் பொறுப்பானது, வெறும் பருவகால முழக்கமாக மட்டும் இருக்கக்கூடாது; மாறாக, இது அல்லாஹ்வின் மீது நாம்

கொண்டுள்ள நம்பிக்கையையும் பக்தியையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.

சமீபத்திய **புகைமூட்டத்தின்** பின்னணியில், அதன் காரணங்களைப் புரிந்துகொண்டு, அது மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான தீர்வுகளைக் கண்டறிய நாம் முயல்வது அவசியமாகும். ஆயினும், இந்தச் சவால்களுக்கு மத்தியில், நம்மால் எதுவும் செய்ய முடியாது என்று எண்ணி விடக் கூடாது. மிக எளிய முயற்சிகள் மூலமாகக்கூட, நேர்மறையான, உடன்பாடான மாற்றத்தைக் கொண்டு வருவதில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.

நமது அன்பிற்குரிய நபி முஹம்மது (ஸல்) அவர்கள் நவின்றுள்ள வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இறைத்தூதர்[ஸல்] நவின்றுள்ளார்கள்: *“மறுமை நாள் தொடங்கவிருக்கும் வேளையில், உங்களில் ஒருவரின் கையில் ஒரு மரக்கன்று இருந்தால், மறுமை நாளின் அந்த நேரம் வருவதற்குள் அவரால் அதை நட முடிந்தால், அவர் அதை நடட்டும்.”* (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மத் ரஹ்)

சுப்ஹானல்லாஹ்! [அல்லாஹ் மேன்மையானவன்; பரிசுத்தமானவன்] நமது பங்களிப்பு எவ்வளவு சிறியதாகத் தோன்றினாலும், உடனடிப் பலன்களைக் காணாதபோதும், நன்மையின் விதைகளைத் தொடர்ந்து விதைக்கவும், ஒருபோதும் நம்பிக்கையை இழக்காமல் இருக்கவும், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் மேற்கண்ட போதனையின் மூலம் இஸ்லாம் நமக்குக் கற்றுத் தருகிறது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

நமது சன் மார்க்கப் போதனைகளின் வழிகாட்டுதலுடன், இன்றைய சவாலான **வானிலை** மற்றும் காலநிலை நிலைமைகளை எதிர்கொள்வதில் நாம் மேற்கொள்ளக்கூடிய மூன்று அர்த்தமுள்ள வழிமுறைகளைப் பற்றிச் சிந்திப்போம்:

**முதலாவதாக: நமது வாழ்க்கை முறைகளைப் பற்றிச் சிந்திப்பது.**

திருக்குர்ஆனின் "அர்-ரூம்" எனும் அத்தியாயத்தின் 41-வது வசனத்தில், *மனிதனின் கரங்கள் செய்த செயல்களின் விளைவாகவே, பூமியில் அழிவு ஏற்பட்டுள்ளது* என்று அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகிறான். உண்மையில், நமது அன்றாடத் தேர்வுகளான அதிகமானச் செலவு செய்யும் பழக்கங்கள், ஆற்றல்களை மிக அதிகமாகப் பயன்படுத்துவது மற்றும் வளங்களை வீணடித்தல் போன்றவையும் **சுற்றுப் புறச்சூழல்** பாதிப்பிற்குக் காரணமாக அமைகின்றன. எனவே, நமது அன்றாட வாழ்வில் பொறுப்புணர்ச்சியையும் நடுநிலைப் போக்கையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

**இரண்டாவதாக: வணக்க வழிபாடுகளில் காணப்படும் மார்க்க ரீதியான சலுகைகளை (ருக்சா) புரிந்து கொள்வது.**

அன்பு சகோதரர்களே! இஸ்லாம் நம் மீது தேவையற்ற சிரமங்களைத் திணிப்பதில்லை. இமாம் புகாரி [ரஹ்] மற்றும் இமாம் முஸ்லிம் [ரஹ்] ஆகியோர் பதிவு செய்து அறிவித்துள்ள ஒரு ஹதீஸில்: *கடும் குளிர் அல்லது **மழைக்காலங்களில்** மக்கள் தங்கள் வீடுகளில் தொழுது கொள்ள அழைப்பு விடுக்குமாறு, ரசூலுல்லாஹி [ஸல்] அவர்கள் முஅத்தின்களுக்கு [தொழுகைக்காக அழைப்பு விடுப்பவர்களுக்கு] அறிவுறுத்தியதாகக்* கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே, கடுமையான **புகைமூட்டம்** போன்ற **வானிலை**, உடல்நலத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும்போது, பள்ளிவாசல்களுக்குச் செல்வதற்குப் பதிலாக வீட்டிலேயே தொழுகையை நிறைவேற்ற இஸ்லாம் நமக்குச் சலுகைகளை வழங்குகிறது. முதியவர்கள், குழந்தைகள் மற்றும் ஏற்கனவே உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள் உள்ளிட்ட நலிவடைந்த பிரிவினருக்கு இது மிகவும் அவசியமானதாகும். இந்தச் சலுகைகளைப் பின்பற்றுவது பலவீனமான இறை நம்பிக்கையின் அடையாளம் அல்ல. மாறாக, இது இஸ்லாமியச் சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக உள்ள, குறிப்பாக, உயிரைப் பாதுகாத்தல் சம்பந்தமான நமது புரிதலைப் பிரதிபலிக்கிறது.

**மூன்றாவதாக: மற்றவர்களுக்குக் கருணை காட்ட வேண்டும்; பிறர் மீது இரக்கம் கொள்ள வேண்டும் எனும் சிந்தனையை வளர்த்துக் கொள்வது** சவாலான **வானிலை** நமது தனிப்பட்ட மன உறுதியைச் சோதிக்கின்றது என்பது மட்டுமல்லாமல், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் மீது அதிக அக்கறை காட்டவும் நம்மைத் தூண்டுகிறது. நமது குடும்ப உறுப்பினர்கள், அண்டை வீட்டார் மற்றும் பரந்த சமூகத்தின் நலனை நாம் கவனத்தில் கொள்வோமாக!. உதாரணமாக, **புகைமூட்டமான** சூழல் இருந்தபோதிலும் அயராது உழைக்கும் உணவு விநியோக ஊழியர்களிடம் நாம் அன்பையும் பரிவையும் காட்ட வேண்டும். முடிந்த இடங்களில் எல்லாம் சிரமப்படும் மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள், அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை எளிதாக்க முயற்சி செய்யுங்கள்.

இப்பூவுலகில் வாழும் சக உயிரினங்கள் மீது நாம் காட்டும் கருணையும் இரக்கமும், அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வின் எல்லையற்ற இரக்கத்திற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கட்டுமாக!. ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.